கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்: திருச்சி.1அவர்களின் செயல்முறை கடிதம்.

****

முன்னிலை: திரு.ஆர்.பிரகாசம்,M.Tech.,
கண்காணிப்புப்பொறியாளர், பொபது.,

செயல்முறைஆணை எண்: 1414-2/2020/நி.2/நாள்: 02.12.2020

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் - செல்வி.T.தனப்பிரியா, இளநிலை உதவியாளராக இவ்வட்ட அலுவலகத்தில் 23.09.2020 முற்பகல் முதல் பணிமேற்கொண்டது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் , தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்குதல் –தொடர்பாக.

பார்வை:
1. முதன்மை தலைமைப்பொறியாளர், (நீ.ஆ.து.,), மற்றும் தலைமைப்பொறியாளர்,),(பொது),பொபது.,சென்னை அவர்களின் செயல்முறை ஆணைஎண்: எஸ்.3(3)/ 35935/2020/நாள்: 17.09.2020.
2. தலைமைப்பொறியாளர், (கட்டடம்), பொபது.,திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை எண்: எஸ்.1(2)/ 5055-8/ 2020/ நாள்:21.09.2020.
3. இவ்வட்ட அலுவலக செயல்முறை ஆணை எண்: 1414/2020/நி.2/ (1417/2020)/நாள்:23.09.2020.

********

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர் (நீ.ஆ.து)., மற்றும் தலைமைப்பொறியாளர், (பொது), பொபது., சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான போட்டித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு,பார்வை 2-ல் காணும் தலைமைப்பொறியாளர், (கட்டடம்), பொபது., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை மூலமாக உரிய பணியமர்வாணை வழங்கப்பட்டு பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணை மூலமாக உரிய மறுபணியமர்வாணை வழங்கப்பட்டு செல்வி.T.தனப்பிரியா, இளநிலை உதவியாளராக, இவ்வட்ட அலுவலகத்தில் 23.09.2020 முற்பகல் பணிமேற்கொண்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

…தபிபா.,

செல்வி.T.தனப்பிரியா, இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 23.09.2020 முற்பகல் முதல்தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-ன் விதி28(1)-ன்படியும், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ன் தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்பிற்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடனும் இளநிலை உதவியாளர் பதவியில் 23.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்தினை துவக்கிவைத்தும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் மூன்றாண்டுகால தொடர் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டு காலத்தகுதி காண் பருவத்தினை திருப்திகரமாக நிறைவுசெய்ய வேண்டும் எனவும் தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அரசுப்பணியாளர் பயிற்சிநிலையத்தில் நடைபெறும் அடிப்படை பயிற்சியில் கலந்துகொண்டு தேர்ச்சிபெறவேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெறுதல் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி பெறுதல் ஆகிய நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் தகுதிகாண் பருவகாலத்தில், எந்தவித விடுப்பில் சென்றாலும், (தற்செயல் விடுப்புமற்றும் மதச்சார்பு விடுப்பு நீங்கலாக) அதற்கேற்ப தகுதிகாண்பருவம் நிறைவுகாலத்திற்கான நீட்டிப்பு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஓம்.ஆர்.பிரகாசம்.
கண்காணிப்புப்பொறியாளர்,பொபது.,
கட்டட(க&ப) வட்டம்,திருச்சி-1.

**பெறுநர்:**
செல்வி.T.தனப்பிரியா,
இளநிலை உதவியாளர்,பொபது.,
கட்டட (க&ப) வட்டம்,
திருச்சி-1

**உபரிநகல்:**கோப்பிற்கு.
**நகல்:**ஆட்சி அலுவலர்.

**//உண்மை நகல்//**

15/6/23

கண்காணிப்புப்பொறியாளர்,சார்பில்.,
கட்டட(க&ப) வட்டம்,திருச்சி-1.

15.6.23